CPMD/FNC-MEGAIT&C/004/V.3.

ஸ்ரீலங்கா ரெலிகொம் பி.எல்.சியினால் வழங்கப்படும் தொலைபேசிச் சேவைகளுக்கான நியதிகளும் நிபந்தனைகளும்

ஸ்ரீலங்கா ரெலிகொம் பி.எல்.சி (இனிமுதற்கொண்டு “ஸ்ரீலரெ” என அழைக்கப்படும்) வழங்கும் சேவையை: இங்கே குறிப்பிடப்பட்டுள்ளதும் காலத்துக்கு காலம் திருத்தப்படுகின்றதும் சம்பந்தப்பட்ட சட்டவாக்கத்தின் கீழுள்ள விதிமுறைகளின்படி உருவாக்கப்பட்டதும் ஸ்ரீலங்கா ரெலிகொம் இணையத் தளத்திலுள்ளதுமான (www.slt.lk) “நியதிகள் மற்றும் நிபந்தனைக”ளைப் பொறுத்து வாடிக்கையாளர் பெற்றும் தொடர்ந்தும் பயன்படுத்தி வருவர்.

பின்வரும் நிபந்தனைகள், பொருத்தமான மற்றும் பொருத்தமற்ற நடத்தைகளுடன் சம்பந்தப்பட்ட வழிமுறைகளாக இயங்கும். ஆகையால் இது எந்தவிதத்திலும் முழுமையானதல்ல என்பதுடன் அவ்விதமான அர்த்தப்படுத்திக்கொள்ளவும் கூடாது. இன்னும் விபரமாக/மேலதிகத் தகலவல்கள் ஸ்ரீலரெ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆவணத்திலும் ஸ்ரீலரெ இணையத்திலும் வரையறுக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கவனமாக வாசித்து அறிந்துகொள்வது வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.

மேலும் இணையத்தளமானது (இனிமுதற்கொண்டு, “இணையத்தைப் பார்க்க” என்று குறிப்பிடுப்படும்) முன்னறிவித்தலின்றிக் காலத்துக்கு காலம் மாற்றப்படலாம் என்பதையும் ஆனால், வாடிக்கையாளர் தொடர்ந்தும் இச்சேவையைப் பயன்படுத்தும் வரையிலான காலத்தில், இணையதளத்தில் வெளியிடப்படும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டுத் தம்மைப்பற்றிய தகவல்களைப் புதுப்பிப்பதற்கு அல்லது அவை தானாகவே புதுப்பிக்கப்படுவதற்கு உடன்படுகிறார் என்பதையும் மாற்றப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தாம் ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில், உடனடியாகச் சேவை இணைப்பைத் துண்டிக்கும்படி ஸ்ரீலரெக்கு அறிவிப்பர் என்பதையும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார்.

1.0 சேவை வழங்கல்

1.1 இந்த உடன்படிக்கையின்படி, வாடிக்கையாளர் பின்வரும் எந்தவொரு பொதிகளுக்கும் (package) (இனிமுதற்கொண்டு “சேவை” என்று அழைக்கப்பட்டுக் குறிப்பிடப்படும்) மாறலாம்.

1.1.1. 'மெகாலைன் சிங்கிள் பிளே' (Megaline single play) - குரல்வழி மட்டும்

1.1.2. 'மெகாலைன் டபிள் பிளே' (Megaline double play) - அகலப்படையுடனான (Broadband) குரல்வழி அல்லது ஐபிரிவி யுடனான குரல்வழி

1.1.3. “மெகாலைன் ட்ரிப்பிள் பிளே” (Megaline triple play) - அகலப்பட்டை (Broadband) மற்றும் ஐபிரிவியுடனான குரல்வழி.

1.2 ஏற்கனவேயுள்ள பொதிக்கான எஞ்சியுள்ள நிலுவைக்கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின்னரே தெரிவுசெய்யப்பட்ட பொதிக்கு மாறுவது நடைமுறைப்படுத்தப்படும். அந்த மாற்றத்திற்கான நிர்வாகக்கட்டணங்களுக்கான, ஸ்ரீலரெ கூடுதல் கட்டணத்தை அறவிடக்கூடும்.

1.3 சேவை வழங்கப்படுகின்ற செயல்முறையின்போது 'மெகாலைன் டபிள் பிளே' மற்றும் 'மெகாலைன் ட்றிபிள் பிளே' போன்ற பொதிகளைத் தெரிவுசெய்யும் வாடிக்கையாளர்களின் தொலைபேசி இணைப்பானது, அந்தச் சேவையை வழங்குவதற்குப் பொருத்தமானதல்லவெனக் கண்டால், அவர்களின் ஏ.டி.எஸ்.எல் மற்றும்/அல்லது பியோ ரி.வி சேவைளைத் திரும்பப்பெற்றுக் கொள்ளும் உரிமை ஸ்ரீலரெக்கு உள்ளது

2.1 காலம்

2.1 இந்த உடன்படிக்கையானது ஸ்ரீலரெயினால் அந்த சேவை நடைமுறைப்படுத்தப்பட்டதும் செயற்பாட்டுக்கு வருவதுடன் 8ம் வாசகத்திற்கிணங்க, ஸ்ரீலரெயினால் அல்லது கீழே குறிப்பிட்டுள்ளபடி வாடிக்கையாளரினால் சேவை முடிவுக்குக் கொண்டுவரும்வரையிலும் செல்லுபடியானதாகவிருக்கும்.

2.2 ஒருவருடக் கடப்பாட்டுக்காலத்தில் வாடிக்கையாளர் அந்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. ஆனபோதிலும் நடைமுறையிலிருக்கும் கட்டணங்களின்படி, ஸ்ரீலரெ கணித்த சேவை முடிவுக்கட்டணத்தைத் தாமதமின்றிச் செலுத்தியதும் தாம் தெரிவுசெய்த பொதியின் கீழுள்ள சகல அம்சங்களின் உடன்படிக்கையையும் இரத்துசெய்யுமாறு வாடிக்கையாளர் கேட்கக்கூடும்.

2.3 கடப்பாட்டுக் காலம் முடிவடைந்ததும், தாம் தெரிவுசெய்த பொதியை நிறுத்துமாறோ அல்லது மாற்றுமாறோ வாடிக்கையாளர் கேட்கலாம்.

3.0 பொறுப்பு நீக்கம்

3.1 நியாயமான வர்த்தக முயற்சிகளை நன்னம்பிக்கையுடன் செய்து தனது சேவைகள் கூடியவரையில் மிக குறைந்த சேவைத்தடங்கல்களுடன் கிடைக்ககூடியதாகவிருப்பதை ஸ்ரீலரெ உறுதிசெய்தாலும் சேவையில் இடைத்தடங்கள் ஏற்படுவதற்கோ அல்லது தவறுகளின்றியிருப்பதற்கோ உத்தரவாதம் அளிக்காது.

3.2 இயற்கை அழிவுகள், விபத்துக்கள், முறையாக பாவிக்கப்படாமை அல்லது வாடிக்கையாளரின் உதாசீனம் அல்லது ஸ்ரீலரெயின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட எந்தவொரு காரணத்தின் விளைவினாலும் ஏற்பட்ட பொருட்சேதத்திற்கோ அல்லது தொலைபேசி இனணப்பில் ஏற்படும் அறைகுறையான தடங்களுக்கோ தாம் பொறுப்பல்ல என்பதை ஸ்ரீலரெ இவ்வண்ணம் வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறது.

3.3 ஸ்ரீலரெ முறைமைகள் அல்லது இணையத்தளத்தினூடாக செல்லும் தகவல்களை ஸ்ரீலரெ கட்டுப்படுத்தவில்லை. ஸ்ரீலரெ ஊடாக செல்லும் எந்தவொரு தகவல்களும் வாடிக்கையாளரின் தனிப்பட்ட பொறுப்பாகும். இச்சேவையை பயன்படுத்தியதன் பயனாக விளைந்த எந்தவொரு இழப்புக்கோ, பாதிப்புக்கோ அல்லது சேவைத் தடங்களுக்கோ ஸ்ரீலரெவையோ அல்லது அதன் ஒப்பந்தகாரர்களையோ அதன் உறுப்பினர்களையோ அல்லது அதன் ஊழியர்களையோ பொறுப்பாகக் கொள்ளமுடியாது.

3.4 ஸ்ரீலரெயின் கட்டுப்பாட்டுக்கு அப்பாட்பட்ட வகையிலே வாடிக்கையாளரின் செயல்களாலோ அல்லது அவரின் கருவியினாலோ “வைரஸ்”அல்லது “ஸ்பாம்” நிறைந்த தரவிறக்கம் மற்றும் தரவேற்றங்களின் விழைவுகளினால் ஏற்படும் செயல் உட்பட்ட, ஆனால் வரையறுக்கப்படாத, வேண்டுமென்று செய்யப்படும் எந்தவொரு இழிவு, அதிகாரம்பெறாத செயல், வாக்கையாளரின் சட்டவிரோதமான செயல்கள் போன்றவைகளுக்கான நட்ட உத்தரவாதத்தை வாடிக்கையாளர் அளிப்பதுடன் ஸ்ரீலரெ இற்கும் நட்ட உத்தரவாதமளிக்கவேண்டும்.

3.5 வாடிக்கையாளரோ அவர்களின் ஊழியர்களோ முகவர்களோ அல்லது அனுமதிக்கப்பட்டவர்களோ சேவையைப் பயன்படுத்தியமையால் அல்லது அதைப் பயன்படுத்தமுடியாமையினால் ஏற்பட்ட மறைமுகமான, தனிப்பட்ட, விளைவாந்தன்மையான அல்லது தண்டிக்கின்ற இழப்புகள்/பாதிப்புகள்/உரிமைக்கோரிக்கைகளுக்கு ஸ்ரீலரெ பொறுப்பாகாது.

3.6 மூன்றாம் தரப்பினரால் உரிமைக்கோரிக்கை விடப்பட்ட எந்தவித அறிவார்ந்த ஆதன உரிமைகள், தவறான தரவுகள் பற்றியதிலான வரைதூறு மற்றும் ஒரு ஸ்ரீலரெ வாடிக்கையாளரினால் ஸ்ரீலரெயின் சேவையூடாக வெளியிடப்பட்ட அல்லது அந்தச் சேவையூடாக ஒலிபரப்பட்ட/அனுப்பட்ட எந்தவிதமான அவதூறுகள் மற்றும்/அல்லது பழிப்புரை சார்ந்த, இழிவுபடுத்தும், மரியாதையற்ற, ஆபாசமான அல்லது தீங்கு விளைவிக்கின்ற தன்மையில் வெளியிடப்பட்ட ஒழுக்க, சமய, இன அல்லது அரசியல் அடிப்படையில் தூய்மைக்கேடான தரவுகள், போன்ற எந்தவிதமான தலையீடுகளுக்காகவும் வாடிக்கையாளர் எந்த நேரத்திலும் நட்ட உத்தரவாதமளிப்பதுடன் ஸ்ரீலரெக்கும் நட்ட உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

4.0 நட்ட உத்தரவாதமளித்தல்

4.1 கவலையீனமாகவோ மோசடியாகவோ அல்லது வேண்டுமென்றோ இச்சேவையை வாடிக்கையாளர் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. அத்துடன் இந்த உடன்படிக்கையை முக்கியமாக மீறும்வகையில் அவரது அதிகாரம்பெற்ற அனுமதிபெற்றவர்களோ அதிகாரமற்ற பணியாளர்களோ அதேபோன்ற வகையில் துஷ்பிரயோகம் செய்யாமலும் கூட்டுநிறுவனம் என்ற ஸ்ரீலரெயின் கௌரவத்தைக் களங்கப்படுத்தாமலும் இருப்பதுடன் அப்படிப்பட்ட இழப்புகளுக்கான உரிமைக் கோரிக்கைகளை வாடிக்கையாளரிடமிருந்து பெறுவதற்கு ஸ்ரீலரெக்கு உரிமையுள்ளது. இந்த நிபந்தனையை மீறும் எந்த மூன்றாம் தரப்பினருக்கெதிரான நட்ட உத்தரவாதத்தை அளிப்பதற்கும் வாடிக்கையாளர் மேலும் உடன்படுகிறார். விபரங்களுக்கு இணைதளத்தைப் பார்க்க.

4.2 சேவை இடைநிறுத்தம்/துண்டிப்பு மற்றும்/அல்லது இந்த உடன்படிக்கையின் நிறுத்தம் அல்லது அறிவார்ந்த ஆதன உரிமை, வரைதூறுகள், பழிப்புரை மற்றும்/அல்லது கீழ்த்தரமான உள்ளடக்கம் அல்லது வாடிக்கையாரின் அவரது வேலையாட்கள், ஊழியர்கள், அனுமதிக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லது முகவர்களது எந்தவிதச் செயல்கள், செயற்பாடுகள் அல்லது உதாசீனம் போன்றவற்றிற்காக வாடிக்கையாளர் ஸ்ரீலரெக்கு நட்ட உத்தரமாதமளிப்பதுடன் ஸ்ரீலரெ அதற்குப் பொறுப்பாகாது.

5.0 வாடிக்கையாளரின் பொறுப்புகள்

இந்த உடன்படிக்கையின்கீழ், வாடிக்கையாளர்கள் ஸ்ரீலரெயினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் பொதிகள் சம்பந்தப்பட்ட முழுமையானதும் சரியானதுமான தகவல்களைக் கொடுக்கவேண்டும்.

5.1 வாசகம் எண் 10 இலுள்ளபடி, வாடிக்கையாளர் சேவைக் கட்டணங்களைத் தீர்க்கவேண்டும்.

5.2 வாசகம் 14 இல் நன்கு விபரிக்கப்பட்டபடி, வாடிக்கையாளர் தனது வீட்டிலுள்ள கருவிகளுக்குப் பொறுப்பானவராவார்.

5.3 வாடிக்கையாளர், ஸ்ரீலரெ இன் அங்கிகாரம் பெற்றவரின் எழுத்திலான சம்மதமின்றி, அதன் சேவகளை வாடகைக்கு விடுதலோ, மீள்விற்பனை செய்தலோ அல்லது அவற்றை ஒழுங்குபடுத்துதலோ கூடாது. தொலைபேசி இணைப்புகையால் அல்லது அதைப்போன்ற எந்தவொரு செயலாலும் ஊடகடத்தப்படும் பிற தொடர்புகளை வாடிக்கையாளர் சேர்ப்பதற்கோ பெறுவதற்கோ அல்லது செய்திகளை வழங்குவதற்கோ உரிமையுள்ளவரல்ல. இச்சேவையானது மறுவிற்பனை செய்வதற்கோ வர்த்தகப் பயன்பாடு போன்றவற்றிற்கோ இதைப் பயன்படுத்தக்கூடாது.

5.4 இங்கே வழங்கப்பட்ட சேவையை, அரசாங்கம்/பாராளுமன்றம்/ஒழுங்குறுத்தும் அமைப்புகள்/சட்ட அமைப்பு அல்லது சட்ட நீதிமன்றம் போன்றவற்றின் சட்டம்/விதிமுறை/விதி/கட்டளைகளை மீறும் எந்தவொரு செயற்பாடுகளுக்காகவோ அல்லது சட்டவிரோத, ஒழுக்கமற்ற அல்லது முறையற்ற நோக்கங்களுக்காகவோ பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர் அனுமதிக்கப்படவில்லை.

அந்தமாதிரியான பயன்பாட்டுக்காக வாடிக்கையாளர் தொலைபேசியைப் பயன்படுத்தினால், ஸ்ரீலரெ அந்த இணைப்பைத் திரும்பப்பெற்றுக்கொள்வதுடன் வாடிக்கையாளருக்காக ஒதுக்கப்பட்ட அந்த இணைப்பைத் துண்டித்துக்கொள்ளவும்கூடும். அந்தமாதிரியான இணைப்பைத் திரும்பப் பெறுதல் அல்லது துண்டித்துக்கொள்ளலின் விளைவாக, வாடிக்கையாளர் நட்ட ஈட்டையோ அல்லது எந்தவொரு இழப்பீட்டையோ பெற்றுக்கொள்ளமுடியாது.

5.5 ஸ்ரீலரெயினால் வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்பைப் பயன்படுத்துவது பற்றிய ஸ்ரீலரெயின் அல்லது ஸ்ரீலரெயின் சார்பாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கு வாடிக்கையாளர் பதிலளிக்கவேண்டும். அந்தக்கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்த காரணத்தினால் ஏற்படும் விளைவினால் தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்படுதலுக்கெதிரான எந்தவொரு நட்டஈட்டையும் வாடிக்கையாளர் கோரமுடியாது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட எந்தவொரு மாதாந்தக் கட்டணத்தையும் திருப்பிக்கொடுப்பதற்கு ஸ்ரீலரெ பொறுப்பாகாது.

5.6 வாடிக்கையாளரின் இருப்பிடத்திற்கான தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தும்போது ஏற்படக்கூடிய எந்தவொரு உயர் மின்சாரச் செலுத்துகையினால் ஏற்படக்கூடிய எந்தவொரு சேதம் அல்லது காயம் காரணமாக, ஸ்ரீலரெக்கு எதிரான எந்தவொரு நட்ட ஈட்டையும் வாடிக்கையாளர் கேட்கமுடியாது. அத்துடன் வேறொரு நபரால் கேட்கப்பட்ட அந்தமாதிரியானதொரு நட்ட ஈட்டுக்கெதிரான ஸ்ரீலரெக்கு நட்ட உத்தரவாதம் அளிக்கவும் வேண்டும்.

5.7 அவசியமேற்படும் பட்சத்தில், தொலைபேசி இணைப்பை பரிசோதிப்பதற்கும் அக்கருவியைப் பராமரிப்பதற்கும் அந்தக் கருவியை இயக்குவதற்கும் தேவையான மின்சாரத்தை, ஸ்ரீலரெவிடம் கட்டணத்தை அறவிடாமல் வாடிக்கையாளர் வழங்கவேண்டும்.

5.8 கம்பங்களை நடுவதற்கும் கம்பிகளைக் கட்டுவதற்கும் தேவையான, தனது சக்திக்குட்பட்ட அவசியமான, எல்லாவகையான வசதிகளையும் ஸ்ரீலரெக்கு வாடிக்கையாளர் செய்துக்கொடுப்பதுடன் தேவைப்படும்போது தொலைபேசி இணைப்பைப் பரிசோதிக்கவும் பராமரிக்கவும் நியாயமான மணித்தியாலங்களில் மேற்சொல்லப்பட்ட நோக்கங்களுக்காக ஸ்ரீலரெ ஊழியர்களை வாடிக்கையாளர் தனது கட்டுப்பாட்டிலிருக்கும் இடங்களுக்குச் செல்வதற்கும் அனுமதியளிக்கவும் வேண்டும். அத்துடன், அந்தமாதிரியான வேலைகளைச் செய்யும்போது, ஸ்ரீலரெ ஊழியர்களினால் ஏற்படுத்தப்படும் இழப்புகள் அல்லது சேதங்களைப் பரிசோதிப்பதற்காக ஸ்ரீலரெ அவரது இடத்திற்குச் செல்ல அனுமதியளிக்கும்போது வாடிக்கையாளர் இல்லாதபட்சத்தில், அதற்கு ஸ்ரீலரெ பொறுப்பாகாது.

6.0 வாடிக்கையாளரால் இணைப்புத் துண்டிக்கப்படுதல்

6.1 ஒருவருடக் கடப்பாட்டுக்காலம் (committed period) முடிவடைந்தபின்னர், அந்தப் பொதியின் கீழ் வழங்கப்பட்டவாறு 3 மாதங்களுக்கு மேற்படாத தற்காலிக சேவை நிறுத்தத்திற்காக, வாடிக்கையாளர் ஸ்ரீலரெவிடம் எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுக்கவேண்டும். அப்போது ஸ்ரீலரெ தொலைபேசியிணைப்புத் துண்டிக்கப்படும் அக்காலப்பகுதியில் அறவிடப்படும் வழமையான வாடகையுடன், காலத்திற்குக்காலம் ஸ்ரீலரெயினால் திருத்தியமைக்கப்படுகின்ற இன்னொரு மேலதிக தொகையையும் அறவிடும்.

6.2 தொலைபேசியிணைப்புத் துண்டிக்கப்பட்டதும், மற்றைய அம்சங்களும் தானாகவே இடைநிறுத்தப்படும்/நிறுத்தப்படும்.

6.3 தொழில்நுட்பக்குறைபாடுகளை/கோளாறுகளைச் சரிப்படுத்துவதற்கு ஸ்ரீலரெ நல் முயற்சிகளைச் செய்யும். அந்தத் தொழில்நுட்பக்குறைபாடுகள்/கோளாறுகளைச் சரிப்படுத்த முடியாதபோது, நிலுவையிலுள்ள எல்லாக் கட்டணங்களும் மாதாந்த வாடகைகள்/வாடிக்கையாளரின் பயன்பாட்டுக் கட்டணங்கள் உட்பட்ட ஆனால் மட்டுப்படுத்தப்படாத கட்டணங்கள் செலுத்தப்படம்பட்சத்தில் அவருக்கான சேவைகள் நிறுத்தப்படும்.

6.4 கீழே சொல்லப்பட்டவாறு சேவைத்துண்டிப்பினால், வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்பட்ட சேவை ஆரம்பக்கட்டணம், மாதாந்த வாடகை, பயன்பாட்டுக் கட்டணம் அல்லது வேறு எந்தக் கட்டணங்களும் உட்பட இழப்பீடுகள், அறிவிடுதல்கள் போன்றவற்றிற்கோ அல்லது எந்தவொரு கட்டணங்களும் திருப்பிக்கொடுக்கப்படுவதற்கோ ஸ்ரீலரெ பொறுப்பாகாது.

6.5 சேவை நிறுத்தப்பட்டதும் வாடிக்கையாளர் உடனே காலந்தாழ்த்தாமல் ஸ்ரீலரெ உபகரணத்தை சாதாரணமான பாவித்தநிலையைத் தவிர, நல்ல நிலையிலே திருப்பிக் கையளிக்கவேண்டும். இந்த நோக்கத்திற்காக, ஸ்ரீலரெயின் அதிகாரம்பெற்ற பணியாளர்கள் முன்னறிவித்தலுடன் தனது இடத்திற்குவர வாடிக்கையாளர் அனுமதிக்கவேண்டும். வாடிக்கையாளர் ஏதாவது முன்பணம் கட்டியிருந்தால், அதனைப் பெறுவதற்கும் உரித்தானவராயிருப்பார்

7.0 ஸ்ரீலரெயினால் இணைப்புத் துண்டிக்கப்படுதல்

7.1 இங்கே வரையறுக்கப்பட்டபடி அல்லது ஸ்ரீலரெயினது இணையதளத்திலும் பொதுச் சட்டத்திலும் வெளியிடப்பட்ட சேவைவழங்கல் மீறல் போன்றவற்றில் சொல்லியபடி, வாடிக்கையாளர் எந்தவொரு நியதியையும் நிபந்தனைகளையும் மீறும்வகையில் எந்தவொரு காரணமும் கற்பிக்கப்படும் பட்சத்தில் அந்தப் பாவணையாளர் கணக்கை இடைநிறுத்தும் உரிமை ஸ்ரீலரெக்கு உண்டு. வாடிக்கையாளர் மறு இணைப்புக் கட்டணம் மற்றும் நிலுவையிலுள்ள சகல கட்டணங்களையும் தீர்க்குமிடத்து, ஸ்ரீலரெ சேவையை மறுபடியும் இணைக்கும்.

7.2 சேவைக்காரணங்களுக்காக, வாடிக்கையாளருக்கு அளிக்கப்பட்ட தொலைபேசியிணைப்பினை அதன் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து துண்டித்து, அந்தப் பகுதியிலிருக்கும் இன்னொரு பரிவர்த்தனை நிலையத்துடன் ஸ்ரீலரெ எந்தநேரத்திலும் இணைக்கலாம். அத்துடன், வாடிக்கையா-ளருக்கு அளிக்கப்பட்ட தொலைபேசி எண்ணை எந்த நேரத்திலும் மாற்றுவதுடன், அவருடைய தொலைபேசி இணைக்கப்பட்ட பரிவர்த்தனை நிலையத்தின் பெயரையும் எண்களையும் மாற்றக்கூடும்.

7.3 ஸ்ரீலரெயினால் வழங்கப்படும் எந்தவொரு சேவைக்கான கட்டணங்களும் முழுதாகவோ அல்லது பகுதியாகவோ நிலுவையிலிருந்தால், அது ஸ்ரீலரெ இனால் வழங்கப்படும் எல்லாச் சேவைகளும் இடைநிறுத்தப்படுவதற்கோ அல்லது நிறுத்தப்படுவதற்கோ இட்டுச்செல்லும். இந்தக் கட்டண நிலுவைக-ளில், வாடிக்கையாளர் தாம் ஸ்ரீலரெ சேவைகளைப் பயன்படுத்திய காலப்பகுதியில், நிலுவையிலுள்ள சகல மாதாந்த வாடகைகளும் உட்படும்.

8.0 வசதிகள் நிறுத்தம்

பின்வரும் காரணங்களுக்காக வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட வசதிகளை ஸ்ரீலரெ நிறுத்தக்கூடும். ஆனபோதிலும், அச்சேவை நிறுத்தங்களினால், வாடிக்கையாளரின் அல்லது அவரது மரபுரிமையாளர், மரணத்தத்துவகாரர், உரிமைத்தத்துவகாரர், பின்னுரிமையாளர் அல்லது சாட்டுதல் பெறுனர் போன்றோரிடமிருந்து நிலுவைக்கட்டணத்தைப் பெறுவது தடுக்கப்படமுடியாததாகும்.

8.1 வாடிக்கையாளரினால் செலுத்தப்படவேண்டிய மாதாந்த வாடகை அல்லது எந்தவொரு மேலதிக கட்டணங்கள், செலவுகள் அல்லது சேதங்கள் பற்றி அறிவிக்கப்பட்டு ஒரு மாதத்தின் பின்னரும் அவை செலுத்தப்படாமலிருக்கும்பட்சத்தில்.

8.2 வாடிக்கையாளர் கடன் தீர்க்கமுடியாதவரென நீதிகாணப்பட்டு அல்லது கடன்தருனர்களுடன் ஒரு ஏற்பாடு அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும்பட்சத்தில்

8.3 ஒரு கம்பனியானது, நெருக்கடியிலிருந்தாலோ அல்லது சொத்துக்களைப் பெறுபவர ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலோ

8.4 எந்தவொரு காரணத்திற்காகவேனும் அரசாங்கம் அதிகார சபை ஒழுங்குறுத்தும் சபையினால் ஸ்ரீலரெக்கு வழங்கப்பட்ட அனுமதி நிறுத்தப்பட்டாலோ அல்லது புதுப்பிக்கப்படாவிட்டாலோ.

8.5 தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டும் தொர்ந்தும் நான்கு மாதங்களுக்கு மேல் அது துண்டிக்கப்பட்ட நிலையிலும் இருந்தாலோ.

8.6 இங்கே சொல்லப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கையாளர் பின்பற்றாதபட்சத்திலோ

8.7 தொலைபேசி இணைப்பின் கட்டுமானம் அல்லது பராமரிப்புக்குத் தேவையான அனுமதி அல்லது வசதியுரிமைகளை எந்தநேரத்திலும் பெறுவதற்கு ஸ்ரீலரெயினால் முடியாமல் போகும்பட்சத்தில்.

8.8 மின்சாரத்தினாலோ அல்லது வாடிக்கையாளரினாலோ அல்லது வாடிக்கையாளருக்காக அல்லது வேறு ஏதோ காரணத்திற்காகக் கட்டப்பட்ட மின் உற்பத்திநிலையத்தினால் ஏற்படும் சேதங்கள் அல்லது சேதங்களால் விளையக்கூடிய தொலைபேசி இணைப்பின் சேதங்களைத் தடுப்பதற்கு அல்லது தொலைபேசி இணைப்புச் சேவை மாற்றம் போன்றவற்றிற்கான அத்தாட்சிப்படுத்தப்பட்ட செலவுகளுக்காக ஸ்ரீலரெக்குத் தேவைப்படும் எந்தத் தொகைக்கும் நட்ட ஈட்டிற்கும் வாடிக்கையாளர் உரிமையானவரல்ல.

9.0 இடமாற்றம்

9.1 திருத்தியமைத்தல்கள்

9.1.1 வாடிக்கையாளரின் வேண்டுகோளின்படியும் சாத்தியமாகக்கூடியதாகவிருக்கும் பட்சத்திலும் அவரின் தொலைபேசி இணைப்பில் ஸ்ரீலரெ எந்தத் திருத்தியமைத்தலையோ தொலைபேசி இணைப்புப் பொருத்தப்பட்ட இடத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும் வகையில் பொருத்தமாகப் பட்டால் கம்பிகளின் வரிசைகள் உட்பட, அங்கே நிலையாகப் பொருத்தப்பட்டவைகள் மற்றும் துணைக்கருவிகளைத் திருத்தியமைத்தல் அல்லது அதேவிதமான கருவியால் தொலைபேசி இணைப்பை அகற்றி மற்றுமொரு நிலைக்கு மாற்றுதலையோ மேற்கொள்ளக்கூடும். இந்தமாதிரியான திருத்தியமைத்தல் அல்லது அகற்றுதல்களுக்கான கட்டணங்களை வாடிக்கையாளர் ஸ்ரீலரெக்கு அளித்தல் வேண்டும்.

9.1.2 திருத்தியமைத்தலானது வாடிக்கையாளர் அல்லது பொதுமக்களின் நன்மைக்கானது என்று ஸ்ரீலரெ கருதும்பட்சத்தில், முன்னறிவித்தலுடனும் எந்தக் கட்டணமும் இன்றியும் எந்த நேரத்திலும் வாடிக்கையாளரின் வேண்டுகோளின்றியும் அதைச் செய்யலாம்.

9.1.3 இந்தமாதிரியான திருத்தியமைத்தலின் விளைவாக, வாடிக்கையாளருக்கு ஏற்படும் எந்தவிதமான இழப்புகளுக்கும் ஸ்ரீலரெ பொறுப்பாகாது என்பதுடன், அந்தத் திருத்தியமைத்தலின்போது ஏற்படும் பாதி அல்லது முழுமையான சேவைத் தடங்கலுக்காக தமது மாதாந்தக் கட்டணத்தில் தள்ளுபடிக்கான சலுகையை வாடிக்கையாளர் பெறமாட்டார்கள்.

9.2 வாடிக்கையாளர் ஏற்கனவேயுள்ள சேவையை வேறு இடத்திற்கு மாற்றித்தருமாறு வேண்டினால், அதற்குரிய செலவுகளை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், ஸ்ரீலரெ புதிய இடத்தில் பழைய சேவையை மாற்றுவதற்கான எல்லா முயற்சியையும் வழங்கும். ஏற்கனவேயுள்ள சேவை/பொதி/அம்சங்களைப் புதிய இடத்திற்கு மாற்றுவதில் தொழில்நுட்பத் தடங்கல்கள் ஏற்படும் பட்சத்தில், வாடிக்கையார் அதற்கு ஸ்ரீலரெவைப் பொறுப்பாக்குவதோ குற்றஞ்சாட்டுவதோ கூடாது என்பதுடன், பொருத்தமாகப்படும் பட்சத்தில் கிடைக்கக்கூடிய சேவையை வழங்குவதற்காக, ஸ்ரீலரெ செயற்படுத்தும் ஒரு புதிய உடன்படிக்கையை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

10.0 கட்டணங்களும் கொடுப்பனவுகளும்

10.1 சேவை ஆரம்பக்கட்டணம், பயன்பாட்டுக்கட்டணம் மற்றும் மாதாந்த வாடகை, விதிப்பனவுகள், வரிகள் உட்பட, சம்பந்தப்பட்ட எல்லாக் கட்டணங்களையும் உரிய திகதியில் கட்டுவதை வாடிக்கையாளர் உறுதிப்படுத்தவேண்டும்.

10.2 ஸ்ரீலரெ இனால் அல்லாத வேறு ஏதோ காரணங்களுக்காக ஏற்பட்ட சேவை இடையூறுகளின் விளைவாக, அச் சேவைகளைப் பெறுவதற்காகச் செலுத்தப்பட்ட மாதாந்த வாடகை/சேவை ஆரம்பக் கட்டணம்/வேறு எந்தக் கட்டணங்களையும் மீளப்பெறுவதற்கு, எந்தச் சந்தர்ப்பத்திலும் எவ்விதமாகவும் வாடிக்கையாளருக்கு உரிமையில்லை.

10.3 வாடிக்கையாளரின் வேண்டுக்கோளுக்கிணங்க, அவரின் தொலைபேசி இணைப்புக்கு ஸ்ரீலரெவினால் வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் வசதிகள் சம்பந்தப்பட்ட கட்டணங்கள், அறவீடுகள், மேலதிக உபகரணங்கள் அல்லது இணைப்பு நீட்டக் கம்பிகள், பிற கட்டணங்கள் போன்றவற்றை உடனுக்குடன் வாடிக்கையாளர் செலுத்தவேண்டும். அந்தக் கட்டணங்களும் அறவீடுகளும், ஸ்ரீலரெயின் கட்டணப்பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி, பதினான்கு (14) நாட்கள் கால அவகாசத்துக்குள்ளே செலுத்தப்படுதல் வேண்டும்.

10.4 வாடிக்கையாளரின் இடத்திலே ஸ்ரீலரெயினால் வழங்கப்பட்ட சேவைகள் களவாடப்பட்டு, தொலைந்து அல்லது நெருப்பினால் அல்லது வேறு பிற காரணத்தினால் அழிக்கப்பட்டு பாகம் அல்லது பாகங்களைத் திருத்துவதற்கு, புதுப்பிப்பதற்கு, அல்லது மாற்றீடு செய்வதற்கு ஸ்ரீலரெக்கு ஆன உறுதிப்படுத்தப்பட்ட செலவுகளை உடனுக்குடன் வாடிக்கையாளர் செலுத்தவேண்டும்.

10.5 தொழில்நுட்ப காரணங்களுக்காகவோ அல்லது அதைத்தொடர்ந்து வாடிக்கையாளர் எந்தத் தொழில்நுட்ப இடையூறுகளையும்/அல்லது தொர்ந்தும் எதிர்கொண்டாலோ, அந்தமாதிரியான பழுதையும்/அல்லது தவறுகளை ஸ்ரீலரெக்கு வாடிக்கையாளர் அறிவித்து, அந்தத் தொழில்நுட்ப இடையூறு/அல்லது பழுதுகளை ஸ்ரீலரெயால் திருத்தமுடியாத பட்சத்தில், அந்தச் சேவைக்கான ஆரம்பக்கட்டணத்தை ஸ்ரீலரெ வாடிக்கையாளருக்குத் திரும்பக் கொடுக்கும் அந்தமாதிரியான சந்தர்ப்பத்தில் இந்த உடன்படிக்கை முடிவுக்கு வரும்.

11.0 மாறுபாடுகள்

11.1 ஸ்ரீலரெ இனால் வழங்கப்படும் சேவைகளுக்கான கட்டணங்கள், 1991 இன் ஸ்ரீலங்கா தொலைத்தொடர்புகள் சட்டம் எண் 25 இன் கீழ் அல்லது ஸ்ரீலங்கா ரெலிகொம் பி.எல்.சியினால்

உருவாக்கப்படும் எந்தவொரு நியதிகள் அல்லது நிபந்தனைகளின் கீழ் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப காலத்திற்குக் காலம் மாறும்.

11.2 சேவை ஆரம்பக்கட்டணமும் மாதாந்தக் கட்டணமும் மற்றும் எந்தவொரு பொருத்தமான கட்டணங்களும் காலத்திற்குக் காலம் மாறும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் மாறக்கூடும்.

11.3 நிலையான இணைப்புக்கு மட்டுமே சேவை ஆரம்பக்கட்டணம் பொருந்தும் என்பதுடன் அது மேலதிக வேலை தேவையாயிருப்பதைப் பொறுத்து மாறுபடும்.

11.4 தொழில்நுட்பரீதியாகச் சாத்தியப்படக்கூடியதும் வழமையான இடமாற்றத்திற்காக கட்டணத்தையும் பொறுத்து, ஸ்ரீலரெ தனது விருப்பப்படியோ, வாடிக்கையாளரின் வேண்டுக்கோளின்படியோ சேவை இணைப்பை வேறு இடத்திற்கு மாற்றக்கூடும்.

12.0 ஸ்ரீலரெயின் உரிமைகள்

12.1 வாடிக்கையாளருக்கு மரணம் ஏற்பட்டால் அல்லது தகராறு காரணமாக வாடிக்கையாளர் தனது இடத்தைவிட்டு வெளியேறவேண்டியேற்பட்டால் ஸ்ரீலரெக்கு அந்த இடத்திற்கான தொலைபேசிச் சேவையைத் துண்டிக்கும் உரிமையுண்டு என்றாலும், இது ஸ்ரீலரெயின் மீதான வாடிக்கையாளரின் பொறுப்பைப் பாதிக்காது.

வாடிக்கையாளர் மரணம் என்பது தனிப்பட்ட வாடிக்கையாளராகவோ அல்லது தனிப்பட்ட உரிமையாளராகவோ இருக்கும்பட்சத்தில், அவரது மரபுரிமையாளர், நிறைவேற்றுனர், உரிமைத்தத்துவகாரர் போன்றோர் இங்கே குறிப்பிட்ட சேவைகள் வழங்கல் பற்றிய பொறுப்புக்களை எடுத்துக்கொள்ளலாம். இறந்த பங்காளியின் எஞ்சியுள்ள பங்காளர்கள் மற்றும் மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுனர், உரிமைத்தத்துவகாரர் ஒன்றுசேர்ந்து வழங்கப்பட்ட இந்தச் சேவைக்குப் பொறுப்பானவர்களாகவிருப்பர். அது ஒரு கம்பனியாகவிருக்கும்பட்சத்தில், பின்னுரிமையாளர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட சார்ட்டேல்காரர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

13.0 அறிவித்தல்கள்

அறிவித்தல்கள் வாடிக்கையாளர் தமது விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படும். முகவரி மாறும்பட்சத்தில் அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே வாடிக்கையாளர் ஸ்ரீலரெக்கு அறிவிப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். முகவரி மாறியதன் காரணமாக வாடிக்கையாளர் எந்தவொரு அறிவித்தலையோ அல்லது வேறு தொடர்புகளையோ பெற்றுக்கொள்ளாதவிடத்து, அதற்கு ஸ்ரீலரெ பொறுப்பாகாது.

14.0 உபகரணம்

14.1 சேவைகள் வழங்குவதற்கான தொலைபேசிக் கருவி, "செட் ரொப் பொக்ஸ்" (Set Top Box), "ஹோம் கேற்வே" (Home Gateway) உட்பட்ட உபகரணங்கள் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும். அந்த மூல உபகரணங்களுக்கான சொந்த உரிமை எப்போதுமே ஸ்ரீலரெவைச் சார்ந்ததாக இருப்பதுடன், இந்த உடன்படிக்கையை வாடிக்கையாளர் நிறுத்தும்பட்சத்தில் அந்த மூல உபகரணத்தை ஸ்ரீலரெவிடம் அவர் திருப்பி ஒப்படைத்தலும் வேண்டும்.

14.2 வாடிக்கையாளர் அகலப்பட்டை (Broadband) உடனான "மெகாலைன் டபிள் பிளே" பொதியைத் தெரிவுசெய்யும் பட்சத்தில், அவர் ஸ்ரீலரெ இனால் வழங்கப்படும் "மொடெம்" அல்லது "ரௌட்டர்" ஐப் பெறலாம் அல்லது அதே பொருட்களை ஸ்ரீலரெயின் பிராந்திய ரெலிகொம் அலுவலகங்களிலோ அல்லது வெளியிடங்களிலோ வாங்கலாம். ஸ்ரீலரெயின் இணையதள உதவிச்சேவையை

வாடிக்கையாளர் எந்த ஸ்ரீலரெ இணைப்பிலிருந்தும் அதன் இலவச எண்ணான 1243 மூலம் அழைப்பதன் மூலம் 24 மணிநேரச் சேவையை ஸ்ரீலரெ இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தேவைப்படின் குறிப்பிட்டதொரு விடயத்தில் உதவுவதற்காக, ஸ்ரீலரெ தனது தொழில்நுட்ப அலுவலவரை வாடிக்கையாளரின் இடத்திற்கு வருவதற்கு ஒழுங்குபடுத்தும்.)

14.3 ஸ்ரீலரெயின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அதனது சேவைகள் மற்றும்/அல்லது அதன் கருவிகளில் கவனக்குறைவாக இருப்பது, வேண்டுமென்றே உண்டாக்கப்படும் எந்தவிதமான சேதங்கள், அனுமதியற்ற செயல்களைப் புரிதல் போன்றவற்றுக்கு ஸ்ரீலரெ பொறுப்பேற்கமாட்டாதென்பதுடன் அவற்றுக்குண்டான சேதங்கள் மற்றும்/அல்லது ஸ்ரீலரெ தீர்மானிக்கும் பிற எந்தக் கட்டணங்களையும் வாடிக்கையாளர் உடனே செலுத்தவேண்டும்.

14.4 வாடிக்கையாளர் எந்த ஸ்ரீலரெ உபகரணங்களையும் சேதப்படுத்தவோ, இணைக்கவோ, மாற்றவோ, அகற்றவோ, விற்கவோ அல்லது மின்சார இணைப்புக்கொண்ட இன்னொரு கருவியுடன் சேர்க்கவோ அல்லது ஸ்ரீலரெயின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி அவற்றின் மீதுள்ள எந்தவிதமான குறியீடுகள், வேலைப்பாடுகள், எண்கள் போன்றவற்றை அழிக்கவோ அல்லது வேறு எவரையும் மேற்கூறிய செயல்களைச் செய்ய அனுமதிப்பதோ அழிப்பதோ கூடாது. ஸ்ரீலரெயின் உறுதிப்படுத்தப்பட்ட அச்சேதங்களுக்கும் இழப்புக்களுக்குமான செலவுகளை வாடிக்கையாளர் செலுத்தவேண்டும்.

14.5 ஆனபோதிலும், ஸ்ரீலரெ வாடிக்கையாளரின் பணத்தை வைத்திருக்கும் பட்சத்தில், வாசகங்கள் 14.3 மற்றும் 14.4 இன் கீழ், அச்சேதங்கள் அல்லது இழப்புக்கான செலவுகளைக் கழித்துக்கொண்டு மீதமிருக்கும் பணத்தை வாடிக்கையாளருக்கு மீளக்கொடுத்தல் வேண்டும்.

15.0 ஒப்படைத்தல்

15.1 ஸ்ரீலரெ இன் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி இங்கே முன்வைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளிலுள்ள முழுதான அல்லது பகுதியானன உரிமைகள் மற்றும்/அல்லது கடப்பாடுகளை, வாடிக்கையாளர்கள், மூன்றாம் தரப்பினரிடம் ஒப்படைத்தல், மீள் விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்தல் கூடாது.

15.2 இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் முன்வைக்கப்பட்ட முழுதான அல்லது பகுதியான உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைத் தனது அதிகாரத்திற்கமைய எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் ஸ்ரீலரெ ஒப்படைக்கலாம்.

16.0 தொலைபேசிச் சேவைகள்

அ. குரல்வழி

ஐ.டி.டி வசதி: ஐ.டி.டி வசதி வழங்கப்பட்ட வாடிக்கையாளர், இரகசிய குறியீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளின் அடிப்படையில் அவற்றைப் பெற்று, ஸ்ரீலரெ இனால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றிப் பயன்படுத்தலாம். இரகசியக் குறியீடு பெறப்படாத பட்சத்திலும் அந்த இரகசியக் குறியீடு வாடிக்கையாளரினால் முறையாகப் பயன்படுத்தப்படாத பட்சத்திலும், வாடிக்கையாளரின் தொலைபேசி எண்ணிலிருந்து செல்லும் எல்லா அழைப்புகளுக்கும் அவர் மட்டுமே பொறுப்பாவார். இது சம்பந்தமாக ஸ்ரீலரெ இனால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை வாடிக்கையாளர் பயன்படுத்தத் தவறி, அதனால் அவருக்கு ஏற்படும் இழப்புகள் அல்லது பாதிப்புகளுக்கு ஸ்ரீலரெ பொறுப்பாகாது.

ஆ. அகலப்பட்டைச் சேவைகள் (விண்ணப்பப் படிவத்திலுள்ள வாசகம் எண் 7 இற்கு மேலதிகமாக)

அனுமதியற்ற பெறுவழி: வாடிக்கையாளர் எந்தவிதத்திலும் அனுமதியற்ற கணினி முறைத் தகவல்களைப் பெறுதலோ அல்லது மாற்றுதலோ அல்லது மற்றைய பாவனையாளர்களின் சேவைகளுக்குத் தடங்கல் செய்யக்கூடிய வகையில் சாதாரணமான முறைமைத் தொழிற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தலோ அல்லது தனக்குச் சொந்தமில்லாத எந்தவொரு இணையக் கணக்கிலும் பெறுவழியை ஏற்படுத்திக்கொள்ளலதோ (ஏமாற்று வேலை செய்தல் - spoofing)- 'hacking' என்னும் கணினிப் பெறுவழிகளை உடைத்துத் தகவல்களைத் திருடுவது உட்பட்ட - போன்றவற்றை ஸ்ரீலரெ உபகரணங்களிலோ அல்லது ஸ்ரீலரெ தொலைத்தொடர்புச் சேவைகளின் மூலம் அல்லது எந்தக் கணினி முறைமைகள் மூலமும் பெறுவழிகளைப் பெறுதலோ சேவைகள் உடனடியாகத் துண்டிக்கப்படுவதற்குக் காரணமாய்விடும். விபரமான தகவல்களுக்கு இணையதளத்தைப் பார்க்க.

நியாயமான பாவனை (இணையத்தின் வரையறையற்ற அகலப்பட்டைப் பொதிகள் பாவனையாளர்களுக்கு மட்டும்): இணையத்தளத்தில் விபரிக்கப்பட்டவாறு, ஸ்ரீலரெ அலகப்பட்டை விரைவானதாகவும் எல்லா நேரங்களிலும் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கக்கூடியதாகவும் இருப்பதை ஸ்ரீலரெ உறுதிப்படுத்த விரும்புகிறது என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார். அதனால், வரையறையற்ற அகலப்பட்டைப் பொதிகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள், ஏனைய ஸ்ரீலரெ வாடிக்கையாளர்களைப்போல இச்சேவையை நியாயமான முறையில் பயன்படுத்தலாம்.

பாதுகாப்பு: வாடிக்கையாளர் தனது பாவனையாளர் பெயரை எந்தவொரு முன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்தி அல்லது அந்தமாதிரியான தகவல்களை வெளிப்படுத்துவதுமாதிரியான முறையில் நடந்துகொண்டு, பின்னர் அந்த முன்றாம் தரப்பினர் இந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ள நியதிகளை மீறும்பட்சத்தில், அவர்களை அதற்குப் பொறுப்பாக்கமுடியாது. தனது கணினியைப் பாதுகாப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பது வாடிக்கையாளரது பொறுப்பாகும். இதனால், அனுமதிக்கப்பட்ட பாவனையாளர் மட்டுமே அக்கணினியைப் பயன்படுத்தலாம். எந்த முன்றாம் தரப்பினரின் அனுமதியுடனான மற்றும்/அல்லது அனுமதியற்ற பாவனையால் இந்த உடன்படிக்கை மீறப்படின் வாடிக்கையாளர் மட்டுமே அதற்குப் பொறுப்பாவார்.

பெறுமதிசேர் சேவை (VAS): வாடகை செலுத்துவதன் மூலம் Web pro/Web Master பொதிகளைத் தெரிவுசெய்யும் வாடிக்கையாளர், தனக்கு இங்கே பெறுமதி சேர் சேவையாக வழங்கப்பட்ட நிலையான ஐ.பி முகவரியானது எப்போதுமே ஸ்ரீலரெ இன் சொத்து என்பதை ஏற்றுக்கொள்கிறார்.

இணையத்துடன் இணைந்த நடத்தை: ஸ்ரீலரெ யின் தனித்த கருத்துப்படி, ஸ்ரீலரெ இனால் வழங்கப்பட்ட சேவைகளை மற்றைய வாடிக்கையாளர்கள் பயன்படுத்துவதும் வசதிகளை அனுபவிப்பதும் மட்டுப்படுத்தும் அல்லது தடுக்கும் நடவடிக்கையை எந்தவொரு வாடிக்கையாளர் செய்வதும் கடுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆபாசமான மொழிகள், சட்டவிரோத நடவடிக்கைகளைச் செய்தல் அல்லது அதைச் செய்வது பற்றிக் கலந்துரையாடுதல், அவ்வாறானவற்றை வெளியிடுதல், அனுப்புதல், வரவேற்றல், தரவுகளைப் பரிமாற்றல், மின்னஞ்சல் அனுப்புதல். செய்திகள் அனுப்புதல், செய்திகள் வாசித்தல் அல்லது எந்த முறையிலும் தரவுகளை அனுப்புதல், பொருள், தகவல் அல்லது மென்பொருள் போன்றவை பற்றிய எந்தச் சட்டத்தையும் மீறுதல் தடைசெய்யப்பட்டதுடன் அதனால் அல்லது இந்த உடன்படிக்கையினை முக்கியமாக மீறியதாகப் பொருள்கொள்ளப்படும். எனவே, வாடிக்கையாளர் இணையச்சேவையைப் பயன்படுத்தி பெருமளவிலான மற்றும்/அல்லது வர்த்தகரீதியான தேவையற்ற செய்திகளையும், "ஸ்பாம்" போன்றவற்றையும், இணைத்தினூடாக அனுப்பக்கூடாது. பதிப்புரிமையின் கீழ் பாதுகாக்கப்பட்ட பொருட்களைப் பதிப்புரிமையின் சொந்தக்காரரின் அனுமதியின்றி, எந்த வகையிலும் தரவேற்றம் செய்வதோ அல்லது மறுபிரதி செய்வதோ கூடாதென்பதை வாடிக்கையாளர் குறிப்பாக ஏற்றுக்கொள்கிறார். பொதுவாக, முன்றாம் தரப்பினரின் அறிவார்ந்த ஆதன உரிமைகளை மீறுதலை ஒரு வாடிக்கையாளர் செய்தால் அது உரிமை மீறலாகப் பொருள்கொள்ளப்படும். விபரங்களுக்கு இணையதளத்தைப் பார்க்க.

இ. பியோ ரிவி சேவை (விண்ணப்பப்படிவம் எண் 8 இலுள்ள வாசகம் 7 இற்கு மேலதிகமாக) இச்சேவையின் உள்ளடக்கமும் அம்சங்களும்

அ) வாடிக்கையாளருக்கு அறிவித்தோ அல்லது அறிவிக்காமலோ இச்சேவையின் கீழ் வழங்கப்பட்ட எந்தச் சேவைகளிலும் அலைவரிசைகளை மாற்றுவதற்கும் மற்றும்/அல்லது வழங்கப்பட்ட பொதிகளுட்பட்ட, ஆனால் மட்டுப்படுத்தப்படாத, எந்த அம்சங்களினதும் உள்ளடக்கத்தினை மாற்றுவதற்கும் ஸ்ரீலரெக்கு உரிமையுள்ளது. மேலும் தனது தனிப்பட்ட அதிகாரத்தின்படி, இச்சேவையின் அம்சங்களை விரிவுபடுத்தவோ, சேர்க்கவோ, தரங்குறைக்கவோ மற்றும்/அல்லது அழிக்கவோ ஸ்ரீலரெக்கு உரிமையுள்ளது.

ஆ) இங்கே வழங்கப்படும் சேவை ஒரு கட்டணத் தொலைக்காட்சிச் சேவை என்பதையும் அதன் உள்ளடக்கம் பெற்றோர்களால் கட்டுப்படுத்தக்கூடிய, ஒரு மின்னணு நிகழ்ச்சிநிரல் வழிகாட்டி (Electronic Programme Guide-EPG) என்ற தனிப்பட்ட அம்சத்தைக் கொண்டுள்ளதென்பதையும் வாடிக்கையாளர் விளங்கிக்கொண்டுள்ளார். இக்குறிப்பிட்ட தனித்துவமான அம்சத்தின் உள்ளடக்கம் ஒளிபரப்பப்படுவது தொடர்பாக, மின்னணு நிகழ்ச்சிநிரல் வழிகாட்டியை இயக்குவதில் வாடிக்கையாளர் முழுமையான பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இ) மின்னணு நிகழ்ச்சிநிரல் வழிகாட்டி மூலமாகக் கேட்கப்படும் எந்தவிதமான மேலதிக உள்ளடக்கங்களுக்குமான அறவிடும் உரிமை ஸ்ரீலரெக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஈ) தனித்தனியாக விலையிடப்பட்ட அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட அலைவரிசைகள், கட்டணப்பட்டியல் பற்றிய நோக்கத்திற்காகக் குறைந்தது ஒரு (1) மாதகாலத்திற்குத்தான் பொருந்தும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார்.

உ) இங்கே வழங்கப்பட்ட உள்ளடக்கமானது, பதிப்புரிமைச் சட்டங்களின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளது. இச்சேவையூடாக ஒளிபரப்பப்படும் உள்ளடக்கத்தினை வாடிக்கையாளரோ அல்லது அவரின் வேலையாட்கள், முகவர்கள், ஊழியர்கள் மற்றும்/அல்லது பிரதிநிதிகள் இதைப் பிரதி செய்யவோ அல்லது நகல் எடுக்கவோ அல்லது மறு ஒளிபரப்புச்செய்யவோ கூடாது. அந்தமாதிரியான எந்தவிதமான அனுமதியற்ற பிரதியெடுத்தல் அல்லது நகல் எடுத்தல் அல்லது மறு ஒளிபரப்புச்செய்யும் நடவடிக்கைகளுக்கு வாடிக்கையாளரே பொறுப்பாவார்.